# 5.5 பரிசுத்த ஆவியின் வரங்கள்

**வேத வசனம்:** மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரணபுருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், எபேசியர் 4:11,12

**அறிக்கை:** தேவன் தம்முடைய விருப்பத்திப்படி நமக்கு வெவ்வேறு ஆவிக்குரிய வரங்களைக் கொடுப்பார்

**சத்தியம்:** மாற்றுத் திறன்களைக் கொண்டிருக்கும் சிலர் மற்றவர்களுக்கு உதவி செய்வதைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்பட்டிருக்கிறீர்களா?

## பாடக்குறிப்புகள்

* நாம் இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளைச் செய்வதே ஆவிக்குரிய வரங்கள் ஆகும்
* ஞானம், அறிவு, விசுவாசம், குணமாக்குதல், தீர்க்கதரிசனம், அற்புதங்கள், ஆவிகளைப் பகுத்தறிதல், பற்பல பாஷைகள், பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதல் - *1 கொரி. 12:7-11*
* மற்ற வரங்கள் - தீர்க்கதரிசன வரம், ஊழியம் செய்யும் வரம், போதித்தல், புத்திச் சொல்லுதல், பகிர்ந்துக்கொடுத்தல், தலைமைத்துவம், இரக்கம் காட்டுதல் ஆகும்.

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- நீங்கள் எந்த வரங்களை அதிகமாக விரும்புவீர்கள்?
- ஆவியின் வரங்கள் ஏன் அதிசயமாக உள்ளது?
- லூக்கா 11:9-13 ன்படி, நாம் இத்தகைய வரங்களை எப்படிப் பெற்றுக்கொள்ள முடியும்?

**வேதப்பகுதி**
*அப்போஸ்தலர் 19:17*

**நீ விசேஷமானவன்** நாம் விசேஷமாகவும் அதிசயமாகவும் உருவாக்கப்பட்டிருக்கிறோம். அவற்றுள் தேவன் நமக்குள் வைத்திருக்கிற வரங்களும் தாலந்துகளும் அடங்கும். அவை யாவை? நீங்கள் எதில் சிறந்தவர்களோ அவற்றை வலப்பக்கத்தில் உள்ள படத்தில் எழுதவும். அதோடு தேவன் தம்முடைய ஜனங்கள் சாட்சியாகவும் பிறருக்கு நன்மை செய்யும்படியாகவும் ஆவிக்குரிய வரங்களைக் கொடுத்திருக்கிறார். தேவன் இயேசுவுடன் இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். *(அப்.10:36-38)*

**செயல்**

தேவன் தந்தத் தாலந்துகளுக்காக நன்றியுள்ளவர்களாய் இருங்கள். அவை பிறருக்கு உதவி செய்வதற்காகவே கொடுக்கப் பட்டிருக்கிறது.

**சிந்திக்க:** தேவன் உங்களுக்கு கொடுத்த வரங்களைச் சிறந்த முறையில் தற்போது பயன்படுத்துகிறீர்களா?

______________________________

______________________________

**என் தாலந்துகள் தேவன் தந்தவையே**

**ஜெபம்:** பரிசுத்த ஆவியின் வரங்களைப் பெற்றுக்கொள்ள தேவன் உனக்கு உதவும்படி ஏறெடுக்கும் ஜெபத்தை கீழே உள்ள இடத்தில் எழுதவும்.

______________________________

______________________________